# ஞான வெண்பா



இறைவன் ஞானவெளி மெய்பிரான் ஞானசித்தர்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான் ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-1

தமிழொன்றுப் போதும் தவம்வந்து கூடும்

அமிழ்தென்று நெஞ்சம் அறிந்தார் - உமிழார்

தமரென்றுக் கொள்வர் தரணியுயிர் யாவும்

சமமென்றுச் சொல்வர் துணிந்து.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-2

கதிரோனைக் கொண்டுக் கலங்கா திருக்க
மதியோனைப் பெற்றால் வளமே - சதியை
விதியாக்கி வீரியமாய் வாழ உபாயம்
குதிக்கா தடங்குங் குறை.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்


திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-3

சந்திரனைத் தான்வணங்கித் தாயருளைப் பெற்றார்க்கு
முந்திவரும் முன்வினையின் நல்லறிவு - மந்திரத்
தந்திரமும் மாமறையின் பேருணர்வும் உண்டாகும்
நந்தியருள் கொண்டு நலம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-4

முன்னை வினைவந்து மூண்டப் பிறப்பிதனில்

தன்னை அறியார்க்குச் சீரில்லை - அன்புடனே

அன்னை அடிபேணி அத்தன் மொழிவாங்கப்

பின்னை அமையுங் குரு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்


திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-5

உருபெற்றக் காரணத்தை உய்த்துணர்ந்து மீள
கருவுற்ற நாள்முதலைக் காண்பார் - குருவாய்
அருளூற்றப் பேரிடத்து ஆளாகிப் போனால்
மருவற்றுப் போவாரிம் மண்ணில்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-6

பெற்றப் பிறவியைப் பேறாய்க் கருதுவோர்
உற்றவித் தேகத்தைப் பேணுவர் - சற்றுந்தான்
கற்றநெறி விட்டகலார்க் கற்பனையைக் கைக்கொள்ளார்
சிற்றம் பலத்தோ டுறைவர்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-7

இரண்டு நிலைதானே இவ்வாழ்வில் வாழ்வோர்
புரண்டுக் கிடந்தாலும் ஏகும் - திரண்டப்
பொருளாய் அறிவுடைத்தோர் போற்றுவர் மண்ணில்
உருவும் உயிருமிரு வேறே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-8

கற்றோ ரெனக்கருதத் தக்காரிங் காரெனில்

மற்றோ ரிடத்தும் மதிப்புவைத்தே - உற்றார்

உறவோ ரெனப்பேதங் காணா துதவிமனப்

பற்றிலா தாரே யெனக்கொள்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான் ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-9

உன்கருமம் ஏதென் றறிவதற்கு மேதினியில்

தன்கர்மந் தானறிந் தானைச்சேர் - அன்புடனே

இன்பமுற இவ்வுலகில் ஈவார்யார் ஞானத்தை

அன்னவர்தம் பாதம் பணி.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-10

புறம்விட் டகம்சேர்ந் தவர்க்கன்றோ இம்மண்ணில்

அறம்விட் டகலா நிலையமையும் - நீறும்

மறமவர்க் காம்மா மதியும் மறையா

திறமும்வந் தேசேரும் காண்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-11

உண்மையொன் றேநாளும் ஊறுசெய்யா தேகாக்கும்
எண்ணில் கறையில்லா தேயாக்கும் - விண்ணினைத்
திண்ணிய ராயடையத் தீர்த்துன் கருமத்தை
மண்ணில் உயர்த்தும் மருந்து.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான் ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-12

உயிரோ டுறைந்தப் பொருள்மூன் றதனை

அயர்வின் றறிந்திட வேண்டும் - தயவால்

உயர்ந்த குருவரு லாலது வாய்க்கப்

பயமிலா துண்மைப் பழகு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-13

கருவிலேக் கொண்டக் கணக்கிற் கிசைந்தே
உருவந் தமைந்தப் படியால் - அருளார்
கருவங் கொளாதுத்தன் கர்மந்தீர்த் தாளுங்
குருவைத் தொழுதுவாழ் வாரே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-14

பாடத் தமிழும் பணியத் தலையும்மெய்


கூடக் குழுவும் குறிப்போடு - நாடவுள்

வாடா மலரொத்த வாசனைக்கூர் ஐயனும்

தேடா தமைந்ததா மிங்கு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-15

மலையில் குகையில் நதியில் கடலில்


அலையா திருக்க வறிந்தார் - நிலையில்

வலையில் விழுந்தே யழுந்தா தெழவே

தலையில் பதிப்பார் மனம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-16

ஆறுடன் வந்தப் பிறவிக்கு மண்ணில்நல்


ஆறுதல் ஆரெனில் ஐயனாம் - தேறுதல்

கூறுதல் கூடும் குருவடித்தா னேழ்நிலைப்

பேறுதல் கிட்டிடச் செய்யும்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான் ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-17

கண்மூன் றிருந்துங் கருதாதுப் போவாரிம்


மண்மூடப் போவர் மறைகூறும் - விண்தேடிப்

பண்பாட நாவறியார் நாளும் கரைந்தோடும்

உண்டதே மிச்சம் பழி.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான் ஞானசித்தர்


திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-18

கடக்கக் கருதின் பிறவியை நாளும்
அடக்கக் கருதுவர் நாவை - முடக்கம்
நடக்கத் தெரிந்திட வேண்டின் மனத்தைக்
கிடக்கப் படுத்தும் அறிவு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-19

ஒருமொழி வேண்டின் குருமொழிக் கொள்கத்


திருமொழி யாயதைப் பேணில் - அருளுந்

தருமொழி யாயது மாறும் அறிந்தார்

வருமொழிப் பார்த்துயிர் வாழ்வர்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-20

அருவத்தை அண்டி அருவமாய் ஆதல்


உருவத்தை அண்டி உருவாய் - கருவாய்

வருநிலைத் தேர்ந்தும் வகையிலாது வாழ்வார்

பொருளிலா வாழ்வில் நுழைந்தார்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்


திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-21

மண்ணில் உளவரை நீமனதில் கொள்வது
எண்ணில் அழுக்கிலா வாழ்தலும் - கண்ணினைப்பில்
விண்ணில் வழிதேடி யூர்தலும் ஆம்பிறர்க்குப்
பண்ணிடா தேதீ வினை.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-22

நித்தியம் நாடி நிமலனின் பாதத்தைச்


சித்தியாக்கச் செல்வோர் அறவழி - நித்தமும்

சத்தியத் தோடுறையச் சாத்திய மாமாம்நல்

புத்தியே பூரண வாசல்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-23

தன்பா லமைந்த மயக்கமே காரணம்
நின்பா லிணங்க மறுக்குமே - அன்பினால்
தன்பால் மனத்தை இழப்பதற் காகுமேல்
இன்பதா லாயிடும் வாழ்வு

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-24

ஊரறியா உண்மை உறவறியா உற்றதன்


பேரறியா போகும் இடமறியா - சீரறியா

சின்னஞ் சிறுபிள்ளைப் போல்வாழும் வாழ்விதனில்

என்னச் சுகங்காண்பா ரீங்கு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-25

அச்சமிலா வாழ்விங்கு வாழுதற்கு நெஞ்சில்மெய்


பச்சமுடன் வேண்டும் பழுதில்லா - எச்சமது

மிச்சமதாய் ஆதற்கு யாவும் இறைநீக்கித்

துச்சமெனக் கொள்வாய் துணிந்து.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-26

கோளொடு பூதமைந்துங் கும்பிட வந்துதவும்

வாளொடு வந்துவினைத் தீர்த்திட - ஆளும்மெய்

தாளொடு காட்சிஈயும் நற்றவப் பேற்றினோரை

நாளொடுக் கொள்க நயந்து.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-27

வேண்டா திருக்கும் மனம்வேண்டி ஆசையைத்

தூண்டா திருக்கும் குருவேண்டு - யாண்டும்பொய்

தீண்டா திருக்கும் நிலைப்பெற்றால் மண்ணிலுன்னைச்

சீண்டா திருக்கும் வினை.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-28

விண்துணைக் கொண்டு விளக்கமுற வாழ்தற்கும்


மண்துணைக் கொண்டு பரந்தேடி - அண்டிடவும்

பண்புடை யாராய் இருத்தல் அவசியமாம்

எண்ணிடில் ஈர்நிலைப் பேணு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-29

குற்றம் குறைக்காணா நெஞ்சுடையோர் குன்றேறி


அற்றம் கடக்கும் நிலைச்சேர்வர் - சுற்றம்தன்

பற்றென மட்டுங் கருதாதுக் காலத்தே

தெற்றிலா வாழ்தல் சிறப்பு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-30

பெய்யா மழைப்பொய்ப்பின் பஞ்சம் தலைத்தூக்கும்

செய்யா தவதானம் ஒழிந்தழியும் - வெய்யோனைத்

துய்க்கா துமனம் சஞ்சலத் தாடிநிற்கும்

மெய்யாம் மழையே அருள்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-31

மண்ணில் மறைவாழ்வு வாழுதற்கு எத்தனிப்பார்


எண்ணில் பழுதில்லா ராயின்மேல் - விண்ணினைக்

கண்கொளப் பொய்யும் பயமுமிலா நற்குணத்தைக்

கொண்டாலே போதும் விடிவு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-32

தண்டனையே வாழ்க்கை யெனத்தன் மனமறியா


துண்பது மிங்குறங்கு தலுந்தானே - மண்பதைக்கு

விண்டதெனக் கொண்டால் விசனமே வந்தெய்தும்

கண்டதனை நம்பா திரு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-33

உண்ணா திருத்தலும் உற்றுறங்கா தேகிடந்து

எண்ணா திருத்தலும் ஏதுபயன் - மண்ணிலுயிர்

அண்டா திருக்கின் வினையைத் தவறியது

உண்டாக் கிடாதுப் பிறப்பு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-34

போற்றித் தொழுதுப் புரைத்தீர்த்த வாழ்வினையே


மாற்றிப் பிறத்தல் அவசியம் - சாற்றுங்கால்

ஆற்றிப் படுத்தி அருளீயும் ஆசானே

கூற்றம் உதைக்குங் கரு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-35

ஆதியைத் தானறிந்தால் அந்தத்தைச் சார்ந்திடலாம்

மீதியுந் தான்வந் தடங்குமால் - நீதியை

ஓதியே நித்தமும் ஓர்நிலைப் பட்டிடில்

பீதியும் போகும் பறந்து.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-36

மதித்தொருவர் பால்சென் றறிவுதேடில் பண்டு

விதித்த வினைக்கு விடையும் - மதியும்

மிதித்தோடா வண்ணம் மறைகூர்ந்துக் கூறின்

துதித்தவரைக் கொள்கத் துணிந்து.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-37

நூல்வண்ணம் நுண்ணறி பெற்றோமென் றேமாறா

சேல்வண்ணம் சேர்த்திட செவிக்குளோர் - ஆல்வண்ணம்

கோல்கொண்ட கோமானே கோபுரத் தேறிநிற்கும்

வால்கொண்ட வண்ணா னறி.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான் ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-38

பட்டுப்போம் பாழ்வினைக்குப் பாலூற்றிக் காத்துயிர்

கெட்டுப்போம் மானுடர்க்குச் சேதியுண்டோ - விட்டுப்போம்

நாளறியா ஊனுடலைப் பெற்றதன் காரணத்தைக்

கேளா திருத்தலே கேடு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான் ஞானசித்தர்


திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-39

பற்றுக்குப் பற்றேறே மருந்தெனப் பற்றியே
உற்றுற்றுப் பார்க்கப் பழகிடு - கற்றவை
சற்றுமுள சாத்திரம் ஆகாதே கோத்திரம்
அற்றுக்கண் மூடிப் பழகு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான் ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வெண்பா-40

தாயினைப் போல்வர் தமக்கவர் தந்தையும்

ஆயினும் அண்டிட ஆகாதாம் - ஆரவர்

நோயினைப் போக்கிடும் நுண்மதித் தேர்ந்தவர்

பாயிரம் பார்த்துப் பணி.

திருச்சிற்றம்பலம்